Registered Office
“Maithri”
132, Cathedral Road,
Chennai 600 086,
India.
CIN: L65993TN2004PLC052856

Tel: 91 44 2811 2472
URL:www.ranegroup.com

# Rane (Madras) Limited

**//Online submission//**

RML/SE/ 17 /2021-22

June 25, 2021

| | |
|---|---|
| **BSE Limited (BSE)**<br>Listing Centre<br>**Scrip Code: 532661** | **National Stock Exchange of India Limited (NSE)**<br>NEAPS<br>**Symbol: RML** |

Dear Sir / Madam,

**Sub: Publication of Newspaper Advertisement – 17th Annual General Meeting of the Company through VC/OAVM & e-voting facility**

In terms of Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR) and Rule 20 of Companies (Management and Administration) Rules, 2014 read with MCA General Circular No. 02/2021 dated January 13, 2021, SEBI Circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 dated January 15,2021 and previous circulars in this regard, we enclose herewith the copy of the advertisements published on June 25, 2021 in **Newspapers -'Business Standard' (English) and 'Dinamani' (Tamil)** in connection with the 17th Annual General Meeting of the Company scheduled to be held on Tuesday, July 20, 2021 through Video Conference(VC)/Other Audio Visual Means (OAVM) and the same are available on the website of the Company at www.ranegroup.com.

We request you to take the above on record as compliance with relevant regulations of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR) and disseminate to the stakeholders.

Thanking you.

For **Rane (Madras) Limited**

SUBHA SHREE SRIDHARAN

Digitally signed by SUBHA SHREE SRIDHARAN
Date: 2021.06.25 12:42:50 +05'30'

S Subha Shree
**Secretary**

Encl: a/a

Newspaper: Dinamani
Language : Tamil
Edition: Tamil Nadu
Date of Publication : June 25, 2021



சந்திப்பு....



சென்னை தலைமைச் செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக வியாழக்கிழமை சந்தித்த அமெரிக்க நாட்டு தூதுரகத்தின் தூதர் ஜூடித் ராவின், உடன் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, அமெரிக்க தூதுரகத்தின் அரசியல் அலுவலர், டஸ்டின் பிச்சல்,பொருளாதார அலுவலர் பரத்குமார் உள்ளிட்டோர்.

# கரோனா தடுப்பூசி முன்பதிவுக்கான இணையதள இணைப்பு

## அமைச்சர் கே.என்.நேரு தொடக்கி வைத்தார்




சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தடுப்பூசி மையங்களில் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்ய இணையதள இணைப்பினை தொடக்கிவைத்தார் அமைச்சர் கே.என்.நேரு. உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூன் 24:** சென்னையில், கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்வதற்கான இணையதள இணைப்பை நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு வியாழக்கிழமை தொடக்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு தடுப்பூசி முன்பதிவுக்கான இணையதள இணைப்பைத் தொடக்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் கூறியது: சென்னை மாநகராட்சியால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை அனைவரும் எளிதில் பயன்படுத்தும் வகையில் டிஜிட்டல் முறையில் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கென சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் சென்னை இன்னோவேஷன் ஹப் (Chennai Innovation Hub) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, மாநகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் கரோனா தடுப்பூசி மையங்களில் பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள நீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்கும் வகையில் மாநகராட்சி இணையதளத்தில் https://www.chennaicorporation.gov.in/gcc/covid}details/ என்ற புதிய இணையதள இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இணையதள வசதியின் மூலம் பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டிய தங்கள் பகுதிக்குள்பட்ட மையத்தை தேர்வு செய்து அதற்கான நேரத்தையும் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், என்ற 044 4612 2300 என்ற தொலைபேசி எண்ணிலும், 94999 33644 என்ற கட்செவி அஞ்சல் (வாட்ஸ் ஆப்) எண்ணிலும் தொடர்பு கொண்டு தடுப்பூசி மையங்கள் மற்றும் அதற்கான நேரத்தையும் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

அந்தந்த மையங்களில் ஒதுக்கப்படும் தடுப்பூசிகளில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இணையதளம் மற்றும் தொலைபேசி எண் வாயிலாக முன்பதிவு செய்வோருக்கு ஒதுக்கப்படும். மீதமுள்ள தடுப்பூசிகள் நேரடியாக வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்வோருக்கு வழங்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் தடுப்பூசி மையங்களுக்கு சென்று நீண்ட நேரம் காத்திருப்பதையும், அதனால் ஏற்படும் கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளம் மற்றும் தொலைபேசி எண் வாயிலாக பொதுமக்கள் மாநகராட்சியின் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் மையம் மற்றும் நேரம் ஆகியவற்றை மட்டுமே முன்பதிவு செய்ய முடியும். தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் விவரங்கள் தடுப்பூசி மையத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அலுவலரின் வாயிலாக மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையர் ககன்தீப் சிங் பேடி, துணை ஆணையர்கள் எம்.எஸ்.பிரசாந்த், டி.சினேகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இன்று முதல் புறநகர் மின்சார ரயிலில் பயணிக்க பொதுமக்களுக்கு அனுமதி

**சென்னை, ஜூன் 24:** புறநகர் மின்சார ரயில்களில் பயணிக்க வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பு: பொதுமுடக்கத் தளர்வு தொடர்பாக கடந்த 20-ஆம் தேதி தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பைத் தொடர்ந்து, மின்சார ரயிலில் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்கள் பயணிக்க அனுமதி வழங்கப்படுகிறது.

அதன் விவரம்: மத்திய, மாநில அரசு ஊழியர்கள், பொதுத் துறை நிறுவன ஊழியர்கள், உயர்நீதிமன்றம் மற்றும் மற்ற நீதிமன்ற ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அனுமதி கடிதம் மற்றும் அடையாள அட்டையுடன் பயணிக்கலாம்.

மேலும், இவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மின்சார ரயிலில் பயணம் செய்யலாம். இவர்களுக்கு அனைத்து வகையான பயணச் சீட்டும் (single, return, season) வழங்கப்படும்.

வெளியூர்களில் இருந்து விரைவு ரயில் மூலம் ரயில் நிலையங்கள் வந்து, அங்கிருந்து புறநகர் பகுதிகளுக்கு செல்லும் பயணிகள், மின்சார ரயிலில் பயணிக்கலாம். அவர்கள் தாங்கள் வைத்திருக்கும் முன்பதிவு ரயில் பயணச்சீட்டைக் காண்பித்து மையங்களில் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு ஒரு முறை மட்டும் செல்வதற்கான 'single' பயணச்சீட்டை வாங்கிக் கொள்ளலாம். இவர்களும் மின்சார ரயிலில் எந்த நேரத்திலும் பயணிக்கலாம்.

பெண் பயணிகளும் எப்போது வேண்டுமானாலும் மின்சார ரயிலில் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு கட்டுப்பாடுகள் கிடையாது. மேலும் இவர்களுக்கும் அனைத்து வகையான (single, return, season) பயணச்சீட்டு வழங்கப்படும். 12 வயதுக்குள்பட்ட குழந்தை த... களை பெண் பயணிகள் தங்களோடு அழைத்துச் செல்லலாம்.



**ஆண்களுக்கு கட்டுப்பாடு:** ஆண் பயணிகள் கூட்ட நெரிசல் அதிகம் இல்லாத சாதாரண நேரத்தில், அதாவது காலை 7 மணிக்கு முன்பு வரையிலும், காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும், இரவு 7 மணிக்கு பிறகு மட்டுமே பயணிக்க அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ஆண்களுக்கு, ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு ஒரு முறை மட்டும் செல்வதற்கான 'single' பயணச்சீட்டு மட்டுமே வழங்கப்படும். இந்த விதிகள், விரைவு ரயிலில் வந்திறங்கி புறநகர் ரயிலில் செல்லும் ஆண்களுக்கும், அடையாள அட்டை மற்றும் நிறுவனத்தின் அனுமதிக் கடிதத்துடன் அலுவலகங்களுக்குப் பயணிக்கும் ஆண்களுக்கும் பொருந்தாது.

அதே நேரம், மின்சார ரயிலில் பயணிக்கும் பயணிகள் அனைவரும் முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட கரோனா தடுப்பு நடவடிக்கைகளை கடைப்பிடிக்காவிட்டால் ரூ.500 அபராதம் விதிக்கப்படும்.

ரயில்வே ஊழியர்களால் எந்த நேரத்திலும், பயணிகளின் ஆவணங்கள் சரிபார்க்கப்படும். அப்போது பயணிகள் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**மின்சார ரயில் சேவை அதிகரிப்பு:** புறநகர் மின்சார ரயிலில் வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்கள் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டதையடுத்து, அதற்கேற்ப சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கரோனா தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதால், தற்காலிகமாக ரத்து செய்யப்பட்ட விரைவு ரயில்கள் மீண்டும் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்தது. அதற்கேற்ப மின்சார ரயில்களின் எண்ணிக்கையையும் கடந்த 2 வாரங்களாக படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இதுவரை 478 எண்ணிக்கையில் மின்சார ரயில் சேவைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை முதல் புறநகர் மின்சார ரயிலில் பயணிக்க பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் கூடுதலாக 152 சேவைகள் என மொத்தம் 630 சேவைகள் வழங்கப்படும் என தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## தடுப்பூசியே தற்காப்பு அரண்!

☞ தடுப்பூசி வழியாகத்தான், நிரந்தரத் தீர்வு கிட்டும். எனவே, தடுப்பூசி போட்டுக் கொள்வது அத்தியாவசியம்.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.

# நெல் கொள்முதலை தீவிரப்படுத்த ராமதாஸ் வலியுறுத்தல்

**சென்னை, ஜூன் 24:** மழை பெய்வதற்கான சூழல் அதிகரித்துள்ள நிலையில், தமிழகம் முழுவதும் நெல் கொள்முதலை தீவிரப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் பகுதிகளில் நெல் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கமடைந்துள்ளன. விளைநிலங்களுக்கே சென்று நெல் கொள்முதல் செய்யும் திட்டத்தை செயல்படுத்தப் போவதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்திருந்தது.

தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் எந்த நேரமும் மழை பெய்தால் கொள்முதல் செய்துள்ள, உழவர்கள் கொண்டு வந்துள்ள நெல் மூட்டைகள் சேதமடையும். எனவே, தமிழகத்தில் நெல் கொள்முதலை அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

# கரோனா தொற்று: 406 பரிசோதனை உபகரணங்களுக்கு ஒப்புதல்

**சென்னை, ஜூன் 24:** கரோனா தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள மேலும் சில நிறுவனங்களின் உபகரணங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கரோனா தொற்றுகளை அறியும் பிசிஆர் பரிசோதனை மற்றும் கரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றல் துரிதப் பரிசோதனைகளுக்கு இதுவரை 406 நிறுவனங்களின் உபகரணங்களைப் பயன்படுத்த மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளித்துள்ளது.

பொதுவாக, சளி மாதிரிகள் மூலம் உடலில் வைரஸ் மரபணு உள்ளதா என்பதை ஆர்டி-பிசிஆர் ஆய்வின் மூலம் அறியலாம். அதே வேளையில், வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றல் உடலில் உருவாகியிருக்கிறதா என்பதை ரத்த மாதிரிகளைக் கொண்டுதான் அறிந்து கொள்ள இயலும். ரேபிட் கிட் எனப்படும் துரிதப் பரிசோதனை உபகரணங்கள் வாயிலாகவும், எலிசா, சிஎல்ஐஏ போன்ற பரிசோதனை மூலமாகவும் அதைக் கண்டறியலாம். இதற்கான பரிசோதனைகள் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், சீன நிறுவனங்கள் அதற்காக அனுப்பிய உபகரணங்கள் தரமற்றவையாக இருந்ததால் அந்த பரிசோதனைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

அதேவேளையில், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் ரத்த மாதிரிகளைச் சேகரித்து மேற்கொள்ளப்படும் ஐஜிஜி பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதைப் பின்பற்றி தமிழகத்திலும் அத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாடு முழுவதும் அத்தகைய துரித பரிசோதனை மற்றும் பிசிஆர் உபகரணங்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் பல்வேறு நிறுவனங்கள் மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் விண்ணப்பித்தன. அதில் இந்தியா மட்டுமல்லாது சீனா, தென் கொரியா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் உபகரணங்களை இங்கு பயன்படுத்துவதற்கு அனுமதி கோரப்பட்டது. அவற்றை தரப் பரிசோதனை செய்த மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம், 203 துரிதப் பரிசோதனை உபகரணங்கள், 203 பிசிஆர் உபகரணங்கள் என மொத்தம் 406 உபகரணங்களை பயன்படுத்த அனுமதியளித்துள்ளது. மற்றவை பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# தமிழகத்தில் புதிதாக 6,162 பேருக்கு கரோனா பாதிப்பு

**சென்னை, ஜூன் 24:** தமிழகத்தில் புதிதாக 6,162 பேருக்கு வியாழக்கிழமை கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று பலி எண்ணிக்கையும் 155 -ஆகக் குறைந்துள்ளது.

மாநிலத்தில் இதுவரை 24 லட்சத்து 49,577 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வியாழக்கிழமை வெளியான பரிசோதனை முடிவுகளில் அதிகபட்சமாக கோவையில் 756 பேருக்கும், ஈரோட்டில் 641 பேருக்கும், சேலத்தில் 419 பேருக்கும், திருப்பூரில் 386 பேருக்கும், சென்னையில் 372 பேருக்கும், நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, கரோனா தொற்றிலிருந்து மேலும் 9,046 பேர் விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர். இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 23 லட்சத்து 67,831-ஆக அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 49,845 பேர் உள்ளதாக சுகாதாரத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 155 பேர் பலியாகியதை அடுத்து மாநிலம் முழுவதும் இதுவரை நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 31,901-ஆக அதிகரித்துள்ளது.

**தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை**
**வேளச்சேரி, சென்னை – 42.**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் உள்ள கீழ்க்காணும் கழிவு செய்த பொருட்களை தி/கள். MSTC Ltd., நிறுவனம் மூலமாக மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

| வ. எண். | பொருள் | ஏலம் நடைபெற உள்ள காலம் |
|---|---|---|
| 1. | கழிவு செய்த ஊர்திகள் | ஜூலை – 2021, ஆகஸ்ட் – 2021, செப்டம்பர் – 2021, அக்டோபர் – 2021, நவம்பர் – 2021, டிசம்பர் – 2021, ஜனவரி 2022, பிப்ரவரி 2022, மார்ச் – 2022 |
| 2. | கழிவு செய்த மின்கலன்கள் மற்றும் கழிவு ஆயில், ஆயில் பேரல்கள் | ஜூலை – 2021, ஜனவரி – 2022 |
| 3. | பழைய பயன்பாடற்ற பொருட்கள் (இரும்பு, அலுமினியம், — எலக்ட்ரிக்கல் மற்றும் டிங்கரிங் பீஸ்) | ஜூலை – 2021, ஜனவரி – 2022 |
| 4. | கழிவு செய்த டயர்கள் (ரேடியல் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மட்டும்) (50 சதவீதம் மட்டும்) | ஜூலை – 2021, ஜனவரி – 2022 |

ஏல தேதி, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை www.mstcecommerce.com மற்றும் www.tenders.tn.gov.in ஆகிய இணைய தளங்களில் ஏலம் நடைபெற உள்ள விவரங்களை காணலாம்.

செ.ம.தொ.இ/408/வரைகலை/2021

இயக்குநர்

**அனுबंध के आधार पर शिक्षकों के नियुक्ति के लिए अधिसूचना**
**ONLINE INTERVIEW FOR TEACHERS ON CONTRACTUAL BASIS**
शैक्षिक-सत्र 2021-22 के लिए केन्द्रीय विद्यालय अरुवंकाडु में विविध पदों पर संविदागत नियुक्ति हेतु प्रथम ऑनलाइन साक्षात्कार

Online Interview for appointment of teachers on contractual basis in KV Aruvankadu and KV Wellington for the year 2021-22, will be conducted as per the schedule given below. For Qualification and other eligibility conditions, kindly refer to the school website **www.aruvankadu.kvs.ac.in**. Application form may be downloaded from our website and submitted along with all supporting documents through speed post or e-mail (principalkvavk@gmail.com) on or before 05.07.2021 upto 5.00 PM. Eligible candidates will be allowed to appear for online interview through google meet.

| Post / पद | Date / दिनांक |
|---|---|
| PGT - Physics, Chemistry, Biology, Maths, English, Hindi, TGT - Maths, English, Hindi, Sanskrit, Social Science, Science. | 09.07.2021 |
| PGT Computer Science, Computer Instructor, Nurse, Yoga Instructor, Tamil Instructor, Art & Craft Instructor, Sports Coach, Data Entry Operator, Counsellor & PRTs. | 10.07.2021 |

Principal
KV Aruvankadu / KV Wellington

**தமிழ்நாடு அரசு**
**6.96 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2051 மற்றும் 6.96 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2056 மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்**

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.2000.00 கோடி** மதிப்பிற்கு **6.96 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2051 ரூ.1000.00 கோடி மற்றும் 6.96 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2056 ரூ.1000.00 கோடி** ஏலத்தின் மூலம் **மறுவெளியீடு** செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/–க்கும் அதன் பின்னர் ரூ.10,000/–ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **ஜூன் 29, 2021** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு–II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **ஜூன் 29, 2021** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:
   அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
   ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. ஏலம் கேட்பவர் எதிர்பார்க்கக் கூடிய விலையினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் **ஜூன் 29, 2021** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **ஜூன் 30, 2021** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. இந்த அரசு பிணையப் பத்திரங்களுக்கு முறையே ஆண்டிற்கு தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2051க்கு, 6.96 சதவீதத்தில் வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை **நவம்பர் 19 மற்றும் மே 19**, தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2056க்கு, **6.96** சதவீதத்தில் வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை **நவம்பர் 19 மற்றும் மே 19** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **ஜூன் 24, 2021 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண்.552(L)/W&M-II/2021 மற்றும் 553(L)/W&M-II/2021-ஐக் காண்க.**

ச. கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை – 9.

செ.ம.தொ.இ/482/வரைகலை/2021

**FinBlue**
A FinTech Centre of Excellence by STPI
**STPINEXT INITIATIVES**

**HIRING MAN POWER ON CONTRACT BASIS**

"AIC STPINEXT INITIATIVES" is a section 8 company incorporated by STPI to act as the nodal agency and common implementation vehicle for various start-up and entrepreneurship activities at STPI. The Company hereby invites applications online from the eligible candidates for the FinTech Centre of Excellence (FinBlue) setup in Chennai, as given below:

| Job Title | No. of Resource Required | Scope |
|---|---|---|
| Graphic Designer | 1 | Graphic Designer for Collaterals, Posters, Flyers, Images etc., to Manage FinBlue Social Handles. |
| Web Developer | 2 | Upgradation and Maintenance of FinBlue Website, SandBox and Market Place. |
| Incubation Manager | 1 | For Outreach, Partner Contact, Coordination and Carry Out the Managerial Activities for the Start-up support. |
| Incubation Intern | 1 | For handling communications, support and Office Management. |

For further details, Please visit our website at https://finblue.stpi.in for Eligibility Criteria, Responsibilities, Requirements, Experience, Salary and Other Terms & Conditions. Send your Resume by email at chennai.fb@stpi.in Start date of receipt of applications: **25th June 2021**. Last date of receipt of applications: **10th July 2021**.

**ரானே (மதராஸ்) லிமிடெட்**
CIN: L65993TN2004PLC052856
பதிவு அலுவலகம்: "மைத்ரி", எண்.132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Tel.: 044 2811 2472 / 73
Website: www.ranegroup.com | E-mail: investorservices@ranegroup.com

**பொது அறிவிப்பு - 17-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்**

இதன் மூலம் கொடுக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால், ரானே (மெட்ராஸ்) லிமிடெட் நிறுவனத்தின் உறுப்பினர்களின் **17-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம் (AGM) 2021 ஜூலை 20 செவ்வாய்க்கிழமையன்று மாலை 03.00 மணிக்கு** வீடியோ கான்பெரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் நடைபெறும்.

தொடர்ச்சியான COVID-19 தொற்றுநோய் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ("MCA") **2021 ஜனவரி 13** தேதியிட்ட அதன் பொது சுற்றறிக்கை எண்.02/2021 மற்றும் இந்திய பத்திர பரிவர்த்தனை வாரியம் (SEBI) **2021 ஜனவரி 15** தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 (கூட்டாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) வீடியோ கான்பெரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் 2021 ஆண்டு வருடாந்திரப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதித்துள்ளது. அதன்படி, கம்பெனிகள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 108ன்படி, கம்பெனிகள் விதி 2014ன் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி 20ன்படி, செபி (கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகளை பட்டியலிடுதல்) ஒழுங்குமுறைப்படுத்துதல் 2015 ("செபி LODR") ஆகியவற்றின் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டமானது வீடியோ கான்பெரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் வழியாக நடத்தப்படும் மற்றும் அலுவலானது மின்னணு முறையாக பரிவர்த்தனை செய்யப்படும். வரம்பு தேதியன்று, அதாவது **2021 ஜூலை 13 செவ்வாய்க்கிழமை அன்று**, உறுப்பினர்களின் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது வைப்பாளர்களின் பதிவேட்டில் வருமானம் பெறும் உரிமையாளர்களாக பராமரிக்கப்பட்டு வருகின்ற நபர் மட்டுமே, வருடாந்திர பொதுக்கூட்டத்தின் "தொலைநிலை வாக்களிப்பு" அல்லது வாக்களிப்பதற்கான வசதியை பெற முடியும். மத்திய வைப்பாளர்கள் சேவைகள் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தை, மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான சேவையை வழங்கிட, கம்பெனியானது ஈடுபடுத்தியுள்ளது, அதாவது தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வாக்களிப்பினை வருடாந்திர பொதுக்கூட்டத்தின் நாளன்று நிறைவேற்றுவதற்காக.

2020-21 ஆண்டு அறிக்கை மற்றும் 17-வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு தங்களுடைய மின்னஞ்சல் முகவரிகளை கம்பெனியில் பதிவு செய்துள்ள / அந்தந்த வைப்பு பங்கேற்பாளர்களுக்கு, மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. மேற்கண்ட ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com, BSE லிமிடெட் இணையதளம் www.bseindia.com, தேசிய பங்குச் சந்தை இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.com, CDSL இணையதளம் https://www.evotingindia.com கிடைக்கின்றன.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால்:

(i) "தொலை மின்னணு வாக்களிப்பு" காலம் **2021 ஜூலை 17 (சனிக்கிழமை) அன்று காலை 9:00 மணி முதல் 2021 ஜூலை 19 (திங்கட்கிழமை) அன்று மாலை 5.00 மணி வரை.** உறுப்பினர்களின் குறிப்பிற்கு மேற்கூறிய காலத்திற்கு பிறகு மின்-வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) இந்த காலகட்டத்தில், வரம்புத் தேதி **2021 ஜூலை 13 செவ்வாய்க்கிழமை அன்று** இருக்கும் அங்கத்தினர்கள் மற்றும் புதிய பங்குதாரர்கள் பிசிகல் வடிவம் அல்லது டிமெட்ரியல் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

(iii) தொலை மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நடைபெறும் வாக்களிப்பில் வாக்களிக்க இயலாது.

(iv) உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறைக்கான இணைய இணைப்பு : https://www.evotingindia.com-ல் shareholders/members loginஐ இயக்கலாம் மாற்றாக அவர்கள் அந்தந்த வைப்பு கணக்கு மூலம் உள்நுழையலாம். தொலை மின்னணு வாக்களிப்பு செயல்முறைக்கான விரிவான வழிமுறைகள், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் சேருதல் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது வாக்களிப்பு ஆகியவை வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்படாத உறுப்பினர்கள் மின் வாக்களிப்பதற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெறுவதற்கான வைப்புத்தொகைகளுடன் வருடாந்திரப் பொதுக் கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி investorservices@ranegroup.com அல்லது RTA மின்னஞ்சல் முகவரி srirams@integratedindia.in அனுப்புமாறு கோரப்படுகிறது.

(vi) வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆய்வுக்கு கிடைக்கின்றன. உறுப்பினர்கள் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரியான investorservices@ranegroup.com எழுதலாம்.

(vii) ஒப்புநோக்குபவர்களான, திரு. C. ராமசுப்ரமணியம், பயிற்சி செய்து கொண்டிருக்கும் கம்பெனி செயலாளர் (ICSI உறுப்பினர் எண். FCS 6125), பங்குதாரர், M/s. CR & அசோசியேட்ஸ், கம்பெனி செயலாளர்கள், அறிக்கையுடன் சேர்த்து, முடிவுகளானது, கம்பெனி இணையதளத்திலும் மற்றும் CDSL-லும் வைக்கப்படும்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது தொலைநிலை மின்-வாக்களிப்பு/மின்-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் வினவல் / தெளிவுபடுத்துதல் அல்லது சிக்கல்களுக்கு www.evotingindia.com என்ற இணையதளத்தில் Help பகுதியின் கீழ் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQ's) மற்றும் மின்-வாக்களிப்பு கையேடு காணலாம் அல்லது திரு. ராகேஷ் தல்வி-யை 022 2305 8542 / 022 2305 8543 / 022 2305 8738 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

(இயக்குனர் குழு உத்தரவுப்படி)
ரானே (மதராஸ்) லிமிடெடுக்காக
எஸ். சுபா ஸ்ரீ
நிறுவனத்தின் செயலாளர்

சென்னை
ஜூன் 24, 2021

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி

Newspaper: Business Standard
Language : English
Edition: All Editions
Date of Publication : June 25, 2021

SHRIRAM City — MONEY WHEN YOU NEED IT MOST

## SHRIRAM CIT… FINANCE LIM…

**Registered Office:** Office No.123, Angappa Naicken Street, C…
**Branch Office:** No.13, 3rd Floor, Meenakshi Towers, Rajamannar Street, G N Chetty Road, T.Nagar, Chennai - 600 017 **Website: www.shriramcity.in**

## POSSESSION NOTICE

Whereas the undersigned being the authorised officer of Shriram City Union Finance Limited (SCUF) under the provisions of the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (said Act) and in exercise of powers conferred under Section 13(12) of the said Act read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 (said Rules) issued demand notices to the Borrowers details of which are mentioned in the table below to repay the amount mentioned in the said demand notices. The Borrowers having failed to repay the amount, notice is hereby given to the Borrowers and the public in general that the undersigned has taken Symbolic Possession of the property described herein below in exercise of powers conferred on him/her under Section 13(4) of the said Act read with rule 8 of the said Rules, on this **22nd and 23rd day of June, 2021.**

The Borrower in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealing with the property will be subject to the charge of Shriram City Union Finance Ltd. for an amount as mentioned herein below with interest thereon.

| Borrower Name and Address | Demand Notice | Description of Property |
|---|---|---|
| **1. Mr. R. Lakshmanan 37, Mettu Street, Anakaputhur Kancheepuram, Chennai - 600070**<br><br>**2. Mrs. L. Poornima 37, Mettu Street, Anakaputhur Kancheepuram, Chennai - 600070** | INR 53,50,464/- (Rupees Fifty Three Lakhs Fifty Thousand Four Hundred Sixty Four only) as on 25.03.2021 under reference of Loan Account No. RSTNGTF18070 50012 with further interest at the contractual rate, within 60 days from the receipt of said notice. Loan A/c No:- RSTNGTF18070 50012 Demand Notice Dated:- 27.03.2021<br><br>Symbolic Possession Dated:- 22-06-2021 | All that piece and parcel of land, bearing Plot No. 4 Comprised in S.No. 41, together with three residential Flats 1) 342 Sq.ft. of UDS out of 1564 Sq.ft., along with residential Flat No. G1 in Ground Floor, having Plinth area of 820 Sq.ft. 2) 342 Sq.ft. of UDS out of 1564 Sq.ft. along with residential Flat No. F1 in First Floor, having Plinth area of 820 Sq.ft. and 3) 440 Sq.ft. of UDS out of 1564 Sq.ft. along with residential Flat No. S1 in Second Floor, having Plinth area of 880 Sq.ft. Situated at "Gurusamy Nagar Extension" Vide CMDA Approval No. 06/09-10, Anakaputhur Village, Alandur Taluk Kancheepuram District and bounded on the: North by : Plot No. 3, South by : Plot No. 5, East by : Vacant Land. West by : 20 Feet Wide Road Measuring with an extent of 1564 Sq.ft., East to west on the Northern side : 54 Feet 9 Inches East to west on the Southern side : 49 Feet 6 Inches , North to south on the Eastern side : 30 Feet North to south on the Western side: 30 Feet Situated within the Sub-Registration District of Pammal and in the Registration District of South Chennai. |
| **1. Mr. R. Prakash No. 13 A, Balaji Flats, Ground Floor, Rajaji Street, Nehru Nagar, Chrompet Chennai – 600044 Also at: Mr. R. Prakash Plot No. 93, Sri Sai Nagar Layout, S.No. 41/1B2B1 & 43/1A, Ward No. D Block No. 8, T.S. No. 10/21 & 11/29, Tambaram Village, Tambaram, Chennai - 600045**<br><br>**2. Mrs. P. Geetha No. 13 A, Balaji Flats, Ground Floor, Rajaji Street, Nehru Nagar, Chrompet Chennai – 600044** | INR 56,85,125/- (Rupees Fifty Six Lakhs Eighty Five Thousand One Hundred Twenty Five only) as on 26.03.2021 under reference of Loan Account No. RSTNGTF17070 50001 with further interest at the contractual rate, within 60 days from the receipt of said notice. Loan A/c No:- RSTNGTF17070 50001 Demand Notice Dated:- 27.03.2021 Symbolic Possession Dated:- 22-06-2021 | All that piece and parcel of Flat No. S-1 measuring 898 sq.ft., in the Second Floor of building named as "Santham Flats", situated in Plot No. 93 in "Sri Sai Nagar" layout, together with undivided share of land measuring 360 sq.ft., out of 2052 sq.ft., comprised in S.No. 41/1B2B1 & 43/1A, Patta Nos. 883 & 1154, as per Tambaram Municipality Town Survey Field Register Copy Ward No. D, Block No. 8, T.S. No. 10/21 & 11/29 of Tambaram Village, Tambaram Taluk, Kancheepuram District and bounded on: North by : 24 Feet Wide Road South by : Plot No. 91 & 92 East by : 30 Feet Wide Road West by : Plot No. 93 Part (Mr. C. Selvaraj Plot) Situated within the Sub Registration District of Tambaram and Registration District of South Chennai. |
| **1. M/s. Fisherman's Fare Restaurants Pvt Ltd. No. 24, Casa Major Road, Egmore, Chennai – 600 008**<br><br>**2. Mr. M. Syed Abuthahir Meridian Heights, Flat No. 305, 154 Peters Road, Royapettai, Chennai – 600014**<br><br>**3. Mr. Thimri Mohemmed Nazeef Ahamed G/1, Rear Block, Sapthmallika Apartments No. 188, Poonamallee High Road, Kilpauk Chennai – 600010** | INR 36,15,868/- (Rupees Thirty Six Lakhs Fifteen Thousand Eight Hundred Sixty Eight only) as on 10.03.2021 under reference of Loan Account No. RSTNGTF19060 60031 with further interest at the contractual rate, within 60 days from the receipt of said notice. Loan A/c No:- RSTNGTF19060 60031 Demand Notice Dated:- 27.03.2021 Symbolic Possession Dated:- 23-06-2021 | All that piece and parcel of Land and Building, Comprised in S.No. 502/10, T.S. No. 32, measuring with an extent of 404.67 Sq.ft., of UDS out of 4946 Sq.ft., together with Flat bearing No. A, in the Ground Floor, having its super built-up area of 720 Sq.ft., along with Covered Car Parking, Situated at Old Door No. 8, New Door No. 2, Block No. 22, Sathalwar Street, Mogappair Village, Ambattur Taluk, Thiruvallur District and bounded on the North By : Sathalwar Street South By : Vacant Land East By : S.Nos. 33, 36, 39/1, 39/2 West By : S.Nos. 31/2, 31/1 Situated with the Sub-Registration District of Konnur and in the Registration District of North Chennai. |
